# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண்.60/பேரூ/முமந/2021

நாள் 23.08.2021

திரு. இ. ரமேஷ் மணிகண்டன்,
ஏர்வாடி, நாங்குநேரி ... முறையீட்டு மனுதாரர்

1. திரு. வாசுதேவன்
உதவிப் பொறியாளர்,
2. திரு. ரமேஷ்,
இளநிலைப் பொறியாளர்
ஏர்வாடி பேரூராட்சி ... எதிர்மனுதாரர்கள்

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், ஏர்வாடி பேரூராட்சி, 48.A பெருந்தெருவைச் சேர்ந்த இ. ரமேஷ் மணிகண்டன் அவர்களின் 22.02.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 24.02.2021 அன்று பெறப்பட்டு 60/2021 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், ஏர்வாடி பேரூராட்சிக்குட்பட்ட எண்.48.A பெருந்தெரு என்ற முகவரியில் வசிக்கும் திரு. இ. ரமேஷ் மணிகண்டன் என்பவர் ஏர்வாடி பேரூராட்சி உள்கட்டமைப்பு நிதி நிரப்பும் திட்டம் 2016–2017 மூலம் சர்வே எண்.433ல் புதிய பேரூராட்சி அலுவலகம் அமைக்கும் பணியினை பேரூராட்சி வேலை உத்தரவு 21.11.2016–ன் மூலம் கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், பள்ளிவிளை, சின்ன நாடார் தெருவைச் சேர்ந்த திரு. வில்லியம் ராஜ் என்ற

ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு, ரூ60.00 இலட்சத்திற்கான (ரூபாய் அறுபது லட்சம் மட்டும்) பணியினை 1.7.2018ல் முடித்தபின், அப்போதைய பொறியாளர் ரமேஷ் மற்றும் உதவி செயற் பொறியாளர் வாசுதேவன் அளவீடுகள் செய்தபின் பில் கொடுத்துள்ளார்கள். ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) அளவீடு புத்தகத்தில் பிடித்தம் செய்து இறுதிப்பட்டியல் உதவி செயற் பொறியாளர் வழங்கியதாகவும், ஒப்பந்ததாரர் இறுதிப் பணிமுடிவறிக்கை தரக்கோரியதற்கு, இருவரும் சென்னை கண்காணிப்புப் பொறியாளரிடம் கையொப்பம் வாங்கவேண்டும் என்று கூறியதாகவும், பணி முடிவடைந்து இரண்டு வருடங்கள் ஐந்து மாத காலமாகிவிட்ட நிலையிலும், இன்றுவரை இறுதிப் பட்டியல் வாங்கிக்கொடுக்கவில்லை என்றும், இதனிடையே உதவிப் பொறியாளர் வாசுதேவன், தூத்துக்குடி மாவட்டத்திற்கு பணிமாறுதலிலும், திரு. ரமேஷ், இளநிலைப் பொறியாளர் நகராட்சித் துறைக்கு பணிமாறுதலில் சென்றுவிட்டார் என்றும், எனவே தற்போதைய பொறியாளர்கள் பட்டியல் எழுதவில்லை என கூறுவதாகவும், 80 வயதான ஒப்பந்ததாரருக்கு, 6% ரூ.3,60,000/– (ரூபாய் மூன்று லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) மற்றும் அளவீடு புத்தகத்தில் ரூ.50,000/–மும் (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) ஆக மொத்தம் ரூ.4,10,000/– (ரூபாய் நான்கு லட்சத்து பத்தாயிரம் மட்டும்) வழங்கப்படவேண்டியுள்ள நிலையில், ஒப்பந்ததாரருக்கு மேற்படி தொகையினை பெற்றுத்தரவேண்டியும், தங்களது வேலையினை சரியாக செய்யாமல் கடமை தவறிய இளநிலைப் பொறியாளர் ரமேஷ் மற்றும் உதவி செயற் பொறியாளர் வாசுதேவன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க உரிய விசாரணை மேற்கொண்டு ஆணையினை பிறப்பிக்குமாறும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. ஏர்வாடி பேரூராட்சி உதவி செயற் பொறியாளர் திரு. வாசுதேவன், மற்றும் இளநிலைப் பொறியாளர் திரு. ரமேஷ் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 10.03.2021 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். மனுதாரர் விசாரணைக்கு ஆஜராகவில்லை. உதவி செயற் பொறியாளர் மற்றும் இளநிலைப் பொறியாளர் ஆகிய இருவரும் விசாரணைக்கு ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்கள்:-

"திருநெல்வேலி மாவட்டம், ஏர்வாடி பேரூராட்சியில் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின்கீழ் ரூ.60 லட்சம் (ரூபாய் அறுபது லட்சம் மட்டும் )மதிப்பீட்டில் புதிய அலுவலக கட்டிடம் கட்ட ஒப்பந்ததாரர் திரு. எம். வில்லியம்ராஜ் என்பவருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு, கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுவிட்டது. ஒப்பந்ததாரருக்குச் சேரவேண்டிய தொகையான ரூ.60 இலட்சத்தில் (ரூபாய் அறுபது லட்சம் மட்டும்), ரூ.59.50 இலட்சம் (ரூபாய் ஐம்பத்தொன்பது லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டுவிட்டது. ஒப்பந்தம் தொடர்பான பதிவுகள் ஏர்வாடி பேரூராட்சியில் கிடைக்கப்பெறாததால், ஒப்பந்ததாரருக்கு சேரவேண்டிய பாக்கித் தொகையான ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மற்றும் டேவணித்தொகையான ரூ.3,60,000/–மும் (ரூபாய் மூன்று லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) ஒப்பந்ததாரருக்கு திருப்பித்தர இயலவில்லை. ஏர்வாடி பேரூராட்சி அலுவலகத்தில் அளவீடுகள் அளவுப் புத்தகம் (M.Book) மற்றும் அதைச் சார்ந்த பதிவுகள் (Records) நீண்ட தேடுதலுக்குப்பின் தற்போது கிடைத்துவிட்ட நிலையில், தற்போது ஏர்வாடி பேரூராட்சியில் பணிபுரிந்துவரும் உதவி செயற் பொறியாளரை தொடர்புகொண்டு,

பணிக்கான பணிமுடிவு அறிக்கை தயார் செய்து ஏர்வாடி பேரூராட்சியால் மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு அளிக்கப்படவேண்டிய பாக்கித் தொகையை விரைவில் அளித்திட நடவடிக்கை மேற்கொள்கிறோம் என உறுதியளிக்கின்றோம். மேலும், இந்நேர்வு தொடர்பாக எனது 10.3.2021 நாளிட்ட நீண்ட விளக்கத்தினையும் இத்துடன் சமர்பிக்கின்றேன்" என்றும் தெரிவித்துள்ளனர்.

3. உதவி செயற் பொறியாளர் நேரடி விசாரணையின்போது அளித்துள்ள 10.3.2021 நாளிட்ட விளக்கத்தில் திரு எம். வில்லியம்ராஜ், நாகர்கோவில் அவர்களுக்கு ஏர்வாடி பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறை ஆணை ந.க.எண்.61/2016 நாள் 21.11.2016 படி அன்றே அலுவலகக் கட்டிடம் கட்டுமானபணி மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டது. வேலை தளத்தில் பணி துவங்கப்பட்ட நிலையில் பொதுமக்கள் நாங்குநேரி வட்டாட்சியரிடம் பணியை தடுத்துநிறுத்த வேண்டியதற்கிணங்க அப்போதைய வட்டாட்சியர் தளத்தினை நேரில் பார்வையிட்டு, முன் நுழைவு அனுமதி பெற்றபின் பணியை துவக்க தெரிவித்ததின்பேரில், மாவட்ட ஆட்சியருக்கு மனு அனுப்பி, அதற்கான முன்நுழைவு அனுமதி 21.09.2017ல் பெற்று பணிகள் துவங்கப்பட்டன. பணிகள் நடைபெறும்பொழுது அதற்கான பட்டியல் தொகை ஒப்பந்ததாரருக்கு உடனுக்குடன் வழங்கப்பட்டுள்ளது. தற்போது வழங்கவேண்டிய தொகை ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) மட்டுமே என்று தெரிவித்துள்ளார். மேலும் ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்புள்ளியுடன் செலுத்திய டேவணித்தொகை 1% மற்றும் பட்டியல் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் டேவணித்தொகை ஆக மொத்தம் ரூ.3,60,000/– (ரூபாய் மூன்று லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. பணிகளுக்கு, பணி முடிவறிக்கைக்கு சம்மந்தப்பட்ட பொறியாளரிடம் ஒப்புதல் பெறப்பட்ட பின்பே இறுதிப்பட்டியல் தயார் செய்து வழங்கப்படும். இந்த பணிக்கான ஒப்பந்ததாரர், பணிகளை மேற்பார்வையிட தனது தள பொறியாளராக (Site Engineer) மனுதாரரை நியமித்து பணிகள் மேற்கொண்டுவந்தார் எனவும், பணிகள் நிறைவுற்று ஐந்தாவது பகுதிப் பட்டியல் தயார்செய்து வழங்கப்பட்டபின் இறுதிப்பட்டியல் தயார் செய்ய அதற்கான கோப்புகள் பெற்று தயார்செய்ய பணிமேற்பார்வையாளர் மற்றும் இளநிலைப் பொறியாளரிடம் தெரிவித்தபின் அதற்கான கோப்புகள் மற்றும் அளவுப் புத்தகங்கள் அலுவலகத்தில் இல்லை என தெரிவித்தனர். மேலும் இது சம்மந்தமாக சம்பந்தப்பட்ட இளநிலை உதவியாளரை அணுகி கோப்புகள் பெற பணிமேற்பார்வையாளரிடம் தெரிவித்ததற்கு, கோப்புகள் கிடைக்கப்பெறவில்லை என தெரிவித்துள்ளனர். மேலும், ஒப்பந்ததாரருக்கு பணி முடிவறிக்கை தயார் செய்து வழங்க கோப்புகள் தேவைப்பட்டதினால் கோப்புகள் கையாளும் இளநிலை உதவியாளர் மீது நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தியபின், மேற்படி கோப்புகள் மற்றும் அளவுப் புத்தகங்கள் ஒப்பந்ததாரரின் தளபொறியாளரும் மனுதாரருமாகிய திரு. ரமேஷ் மணிகண்டன் 8.11.2018 அன்று அளவுகளை சரிபார்ப்பதற்காக தன்னிடம் பெற்று திரும்ப வழங்கியுள்ளதாகவும், மீண்டும் இவரே முடிவு அறிக்கை தயார் செய்யவேண்டுமென தெரிவித்து அளவுப் புத்தகங்களை 20.02.2019 அன்று அலுவலகத்திலிருந்து பெற்றுச் சென்றதாக தெரிவித்தும், அதன்பின் 2018–2019ஆம் ஆண்டு தணிக்கைக்கு அளவுப் புத்தகங்கள் மற்றும் கோப்புகள் தேவைப்பட்டதினால், அதனை திரும்பப் பெறுவதற்கு புத்தகங்களை வாங்கிச்சென்ற மனுதாரரை எந்தவழியிலும் தொடர்புகொள்ள முடியவில்லையென்றும் தெரிவித்துள்ளார்.

இதனால் தணிக்கை தடை எழுப்பப்பட்ட விபரத்தினை செயல் அலுவலருக்கு தெரிவித்தும், அதன்பின் 18.9.2020 அன்று கோப்பு மற்றும் அளவுப் புத்தகங்கள் வள்ளியூர் பேரூராட்சியில் இருப்பதாக தெரிவித்து ஏர்வாடி பேரூராட்சிக்கு ஒப்படைப்பு செய்ததாக தெரிவித்தும், 22.9.2020 அன்று பணி மேற்பார்வையாளர் பணிமுடிவறிக்கை தயார் செய்து சென்னைக்கு கொண்டுசெல்லவேண்டுமென தெரிவித்து பெற்றுச் சென்றதாக எழுத்துபூர்வமாக ஏர்வாடி பேரூராட்சி இளநிலை உதவியாளர் தெரிவித்து கடிதம் வழங்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுவாக பணிகள் நடைபெறும்பொழுது அதற்கான அளவீடுகள் அளவுப் புத்தகத்தில் இளநிலை பொறியாளரால் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு உதவி செயற் பொறியாளரால் அளவுகள் சரிபார்க்கப்பட்டபின் பணி மேற்பார்வையாளர் மற்றும் இளநிலைப் பொறியாளரால் பட்டியல் தயார் செய்யப்பட்டு ஒப்புதலுக்கு உதவி செயற் பொறியாளரிடம் அனுப்பிவைக்கப்படுமென்றும், அதனை சரிபார்த்து உதவி செயற் பொறியாளர் ஒப்புதல் வழங்கியபின், செயல் அலுவலரால் பட்டியல் தொகை வழங்கப்படும். இப்பணி முடிவுற்ற பின் சம்மந்தப்பட்ட கோப்புகள் மற்றும் அளவீடு புத்தகங்கள் தான் திருநெல்வேலி மாவட்டத்தில் பணியாற்றிய காலத்தில் கிடைக்கப்பெறாத காரணத்தினாலும், மேலும் கோப்புகள் பெற்றபின் தன்னிடம் தெரியப்படுத்தாத காரணத்தினாலும் இதற்கான பணி முடிவறிக்கை சம்மந்தப்பட்ட பொறியாளர்கள் மூலம் தயார் செய்து வழங்க இயலவில்லை என்றும் உதவி செயற் பொறியாளர் தெரிவித்துள்ளார். மேலும் தான் தூத்துக்குடி மாவட்டத்திற்கு மாறுதலாக சென்றுவிட்டபடியால் தன்னால் பட்டியல் தயார்செய்ய இயலாத நிலையில், தற்போது பணியாற்றும் பொறியாளர்களால் பணி முடிவறிக்கை தயார் செய்யப்பட்டு வருவதாகவும், இதற்கான ஒப்புதல் சம்மந்தப்பட்ட பொறியாளரிடம் பெற்று இறுதிப்பட்டியல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும், மனுதாரர் கோப்புகள் எடுத்துச்சென்று தவறவிட்டு காலதாமதம் ஏற்படுத்தியதால் தான் பணிபுரிந்த காலத்தில் பொறியாளர்களால் இறுதிப்பட்டியல் தயார்செய்யும் பணிகள் மேற்கொள்ள இயலவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

4. 10.03.2021 நாளிட்ட விசாரணையில் மனுதாரராகிய திரு. இ. ரமேஷ் மணிகண்டன் ஆஜராகாத நிலையில், அவருக்கு மீண்டும் ஒரு வாய்ப்பளிக்கலாமென இம்முறைமன்ற நடுவம் கருதி, அவ்வாறே முடிவுசெய்ததால், 12.4.2021 அன்று விசாரணைக்கான நாள் தீர்மானிக்கப்பட்டு, மனுதாரர் மற்றும் அப்போதைய ஏர்வாடி பேரூராட்சி பொறியாளர்கள் ஆகியோரை மேற்படி தேதியில் இம்முறைமன்ற நடுவத்தின் நேரடி விசாரணையில் கலந்துகொள்ளுமாறு அறிவுறுத்தி அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. எனினும், கொரோனா தொற்று காரணமாக 12.4.2021ல் நடைபெறவிருந்த நேரடி விசாரணை தேதி ஏதும் குறிப்பிடப்படாமல் இம்முறைமன்ற நடுவத்தினால் ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும், மேற்படி விசாரணை 27.7.2021ல் நடைபெற உத்தேசிக்கப்பட்டு, அதற்கான அழைப்பாணைகள் முறையீட்டு மனுதாரரான திரு. இ. ரமேஷ் மணிகண்டன் மற்றும் ஏர்வாடி பேரூராட்சி பொறியாளர்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

5. இறுதி வாய்ப்பாக முறையீட்டு மனுதாரருக்கு அளிக்கப்பட்ட வாய்ப்பிலும் அவர் பங்குகொள்ளவில்லை. ஏர்வாடி பேரூராட்சி உதவி செயற் பொறியாளர் திரு. மு. முகம்மது ஷரீப் மற்றும் களக்காடு பேரூராட்சி (தொகுப்பு) இளநிலைப் பொறியாளர் திரு. சு. சேதுராமலிங்கம் ஆகியோர் 27.7.2021 நாளிட்ட நேரடி விசாரணையில் ஆஜராகி

முறையீட்டு மனுதாரர் திரு. இ. ரமேஷ் மணிகண்டன் அளித்துள்ள முறையீட்டு மனு தொடர்பாக தங்களது வாக்குமூலத்தை அளித்துள்ளனர். அவர்கள் அளித்துள்ள வாக்குமூலத்தில் "திருநெல்வேலி மாவட்டம், ஏர்வாடி பேரூராட்சியில் உள்கட்டமைப்பு இடைவெளி நிரப்பும் நிதியின் மூலம் அலுவலகக் கட்டிடம் கட்டும் பணிகள் திரு. வில்லியம் ராஜ் என்கிற ஒப்பந்ததாரரால் கட்டிமுடிக்கப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு சேரவேண்டிய நிலுவைத் தொகை ரூ.50,000/-ல் (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) பிடித்தம் போக ரூ.45,500/-ஐ (ரூபாய் நாற்பத்தைந்தாயிரத்து ஐநூறு மட்டும்) 7.7.2021 அன்று காசோலை மூலம் வழங்கப்பட்டுவிட்டது (காசோலை எண்.559242 நாள் 07.07.2021). அதற்கான Bank Payment voucher நகலினை இம்மன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கிறோம். மேலும் மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு சேரவேண்டிய டெபாசிட் தொகை ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) தணிக்கை முடிவுற்ற பின்னர் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படும் என்பதையும் இம்மன்றத்தின் முன் வாக்குமூலமாக பதிவு செய்கிறோம். மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட நிலுவைத் தொகை தொடர்பாக விண்ணப்பதாரரிடம் தொலைபேசியில் தொடர்புகொண்டு விபரம் கோரப்பட்டது. மனுதாரரும் தாம் மேற்கண்ட தொகையான ரூ.45,500/-ஐ (ரூபாய் நாற்பத்தைந்தாயிரத்து ஐநூறு மட்டும்) காசோலையாக பெற்றுக்கொண்டதாக தெரிவித்துள்ளார் என்பதையும் இம்மன்றத்தின் முன் பதிவு செய்கிறோம். மேலும் இந்நேர்வு தொடர்பான எங்களது அறிக்கையினையும் இம்முறைமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறோம்" என்று தெரிவித்துள்ளனர்.

திரு. மு.ஷே. முகம்மது ஷரீப், உதவி செயற் பொறியாளர் (பேரூராட்சிகள்), திருநெல்வேலி மாவட்டம் அளித்துள்ள அறிக்கையில் ஏர்வாடி பேரூராட்சியில் அலுவலகக் கட்டிடம் கட்டும் பணி முழுவதும் நிறைபெற்று பயன்பாட்டில் இருந்துவருகிறதென்றும், திரு. இ. ரமேஷ் மணிகண்டன் என்பவரால் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் அலுவலக கட்டிட கட்டுமான பணிக்கான பணிமுடிவறிக்கை மற்றும் பட்டியல் தொகை வழங்கப்படவில்லை என புகார் அளித்துள்ளதன் அடிப்படையில், 10.03.2021ல் நடைபெற்ற விசாரணையில் முந்தைய உதவி செயற் பொறியாளர் திரு. வி. வாசுதேவன் மற்றும் உதவிப் பொறியாளர் திரு. ரமேஷ் ஆகியோர் நேரில் ஆஜரானார்கள். அதில் இதற்கான கோப்பு மற்றும் அளவீடு புத்தகங்கள் அலுவலகத்தில் கிடைக்கப்பெறாத காரணத்தினால் இதற்கான பணி முடிவறிக்கை தயார்செய்ய இயலவில்லை என தெரிவித்தும், தற்போது இதற்கான கோப்பு மற்றும் அளவுப் புத்தகங்கள் கிடைக்கப்பெற்றுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்கள். எனவே, முறைமன்ற நடுவம் தற்போதுள்ள பொறியாளர்கள் மூலம் பணி முடிவறிக்கை தயாரித்து பட்டியல் தொகை வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென தெரிவித்ததன் அடிப்படையில், இளநிலைப் பொறியாளர் திரு. சேதுராமலிங்கம் என்பவரால் 19.03.2021 அன்று பணி முடிவறிக்கை தயாரிக்கப்பட்டு, அன்றே தன்னால் கையொப்பமிடப்பட்டு, செயற் பொறியாளர், திருநெல்வேலி மண்டலம் அவர்களால் மேலொப்பம் இடப்பட்டு, சென்னை பேரூராட்சிகளின் இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு, பேரூராட்சிகளின் கண்காணிப்புப் பொறியாளரால் 02.04.2021 அன்று பணி முடிவறிக்கை சான்று வழங்கப்பட்டது என்றும் தெரிவித்துள்ளார். மேலும், அதன் அடிப்படையில், பகுதிப் பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை போக மீதமுள்ள தொகை ரூ.45,500/-ஐ (ரூபாய்

நாற்பத்தைந்தாயிரத்து ஐநூறு மட்டும்) காசோலை எண்.559242 நாள் 07.07.2021ல் கனரா வங்கி ஏர்வாடி மூலம் ஏர்வாடி பேரூராட்சி செயல் அலுவலரால் ஒப்பந்ததாரர் திரு. வில்லியம்ராஜ் என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், பணியில் பிடித்தம் செய்யப்பட்ட கூடுதல் வைப்புத்தொகை, பணி முடிவறிக்கை மற்றும் காசோலை வழங்கிய நிதியாண்டிற்கான வழக்கமான தணிக்கை நடைபெற்று தணிக்கை அறிக்கை பெற்ற பின்னர் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என தெரிவிவித்துள்ளார். இதே அறிக்கையினை இளநிலைப் பொறியாளர் திரு க. சேதுராமலிங்கம் என்பவரும் 27.7.2021 நாளிட்ட தமது அறிக்கையிலும் குறிப்பிட்டுள்ளார்.

6. இந்நேர்வில், முறையீட்டு மனுதாரரின் முறையீட்டு மனு, முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ள புகார் குறித்து ஏர்வாடி பேரூராட்சி முன்னாள்/இந்நாள் செயல் அலுவலர்கள் 10.03.2021 மற்றும் 27.07.2021 ஆகிய நாட்களில் இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையின்போது அளித்துள்ள வாக்குமூலங்கள் மற்றும் விளக்க அறிக்கைகள் ஆகியன இம்முறைமன்ற நடுவத்தினால் மிக கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. ஏர்வாடி பேரூராட்சி முன்னாள் உதவி செயற் பொறியாளர் திரு. வாசுதேவன் மற்றும் முன்னாள் இளநிலைப் பொறியாளர் திரு. மு. ரமேஷ் ஆகியோர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள அலுவலக கோப்புகள் மற்றும் அளவுப் புத்தகங்கள் (M.Books) ஒப்பந்ததாரரின் தள பொறியாளரும் மனுதாரருமாகிய திரு. ரமேஷ் மணிகண்டன் 8.11.2018 அன்று அளவுகளை சரிபார்ப்பதற்காக பெற்றுச்சென்றதாகவும், பின்னர் 18.09.2020 அன்று கோப்பு மற்றும் அளவுப் புத்தகங்கள் வள்ளியூர் பேரூராட்சியில் இருப்பதாக தெரிவித்து 18.9.2020 அன்றே ஏர்வாடி பேரூராட்சியில் ஒப்படைத்தார்கள் என்று குறிப்பிட்டுள்ளது ஏற்கக்கூடியதாக இல்லை. ஏதோ கதை கூறி ஏமாற்ற எத்தளிப்பதாகத்தான் தெளிவாகத் தெரிகிறது. மேலும், ஒப்பந்ததாரர் 1.7.2018—லேயே தமக்கு அளிக்கப்பட்ட ஒப்பந்தப்பணியினை முடித்துவிட்ட நிலையில் இரண்டாண்டுகளுக்கும் மேலாக அவருக்கு வழங்கப்படவேண்டிய பணிநிறைவறிக்கை மற்றும் அவருக்கு அளிக்கப்படவேண்டிய மீதித்தொகை ஆகியவற்றை வழங்காமல் காலம் தாழ்த்தியது வேண்டுமென்றே திட்டமிட்டு செய்த செயலாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. ஒப்பந்ததாரர் திரு. வில்லியம் ராஜ் என்பவருக்கு கட்டி முடிக்கப்பட்ட அலுவலகக் கட்டிடப்பணிக்கான நிலுவைத்தொகை ரூ.50,000/—ல் (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) பிடித்தம் போக ரூ.45,500/— (ரூபாய் நாற்பத்தைந்தாயிரத்து ஐநூறு மட்டும்) 7.7.2021 அன்று காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்திருப்பது மற்றும் ஒப்பந்ததாரருக்குச் சேரவேண்டிய டெபாசிட் தொகை ரூ.3.00 லட்சம் (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்), தணிக்கை முடிவுற்ற பின்னர் வழங்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளதும், புகார்மனு குறித்து விசாரணை மேற்கொண்டதன் அடிப்படையிலேயே வழங்கப்பட்டுள்ளதாக இம்முறைமன்ற நடுவம் கருதவேண்டியுள்ளது. எனவே, வேண்டுமென்றே காலதாமதத்தை ஏற்படுத்திய ஏர்வாடி பேரூராட்சி முன்னாள் உதவி செயற் பொறியாளர் திரு. வாசுதேவன் மற்றும் முன்னாள் இளநிலைப் பொறியாளர் திரு. ரமேஷ் ஆகிய இருவர் மீதும் உரிய சட்ட விதிகளுக்குட்பட்டு, துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரை செய்ய இம்முறை மன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் அவர்கள் மீது மேற்கொள்ளப்படும் ஒழுங்குநடவடிக்கை குறித்த விவரங்களை இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவிக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், தணிக்கை முடிவுற்ற பின் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவேண்டிய தொகையினை விதிகட்குட்பட்டு தாமதமின்றி வழங்கிடுமாறு செயல் அலுவலர், ஏர்வாடி பேரூராட்சி அவர்களுக்கு அறிவுறுத்தியும் ஆணையிடப்படுகிறது.

2021ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 23–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

திரு. இ. ரமேஷ் மணிகண்டன்,
48.A பெருந்தெரு, ஏர்வாடி, நாங்குநேரி வட்டம், திருநெல்வேலி மாவட்டம்

பேரூராட்சிகளின் ஆணையாளர், பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், எம்.ஆர்.சி நகர், சென்னை–28

திரு. வெ. வாசுதேவன், ஏர்வாடி பேரூராட்சி முன்னாள் உதவி செயற் பொறியாளர் (தற்போது உதவி செயற் பொறியாளர், தூத்துக்குடி மாவட்டம்) (உரிய வழிவாக)

திரு. மு. ரமேஷ், ஏர்வாடி பேரூராட்சி முன்னாள் இளநிலைப் பொறியாளர் (தற்போது இளநிலைப் பொறியாளர் சென்னை மாநகராட்சி) (உரிய வழியாக)

உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள், திருநெல்வேலி மாவட்டம்
இளநிலைப் பொறியாளர், களக்காடு பேரூராட்சி (தொகுப்பு), திருநெல்வேலி மாவட்டம்
செயல் அலுவலர், ஏர்வாடி பேரூராட்சி, திருநெல்வேலி மாவட்டம்

நகல்:
இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி